பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

**09 01 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜம்மு-காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டவும், தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்கவும் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. அஞ்சல்துறையில் நவீன சேவைகளை உறுதி செய்வதே மத்திய அரசின் இலக்கு என்று தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

3. வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், பாரீசில் நேற்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானை சந்தித்துப் பேசினார்.

4. வெனிசுலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சியினர் மற்றும் வெளிநாட்டவரை விடுவிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

5. பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் **Neil Oberleitner** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஜம்மு-காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டவும், தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்கவும் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

நேற்று புதுதில்லியில் நடைபெற்ற ஜம்மு-கஷ்மீர் பாதுகாப்பு நிலவரம் குறித்த உயர்நிலை ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், தீவிரவாத உள்கட்டமைப்புகள் மற்றும் அதற்கு நிதி திரட்டும் முயற்சிகளை முறியடிக்க தொடர் நடவடிக்கைகள் அவசியம் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் உறுதியான நடவடிக்கைகளால் ஜம்மு-கஷ்மீரில் தற்போது தீவிரவாத செயல்கள் முடக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜம்மு-கஷ்மீரில் பாதுகாப்புச் சூழலை வலுப்படுத்தி வரும் பாதுகாப்பு அமைப்புகளின் முயற்சிகளை அவர் வெகுவாக பாராட்டினார்.

அங்கு தொடர்ந்து அமைதி நிலவ அனைத்து பாதுகாப்பு அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு. அமித்ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அஞ்சல் துறையில் ஒவ்வொரு குடிமகனுக்கும் நவீன சேவைளை உறுதி செய்வதே மத்திய அரசின் இலக்கு என்று மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜேதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

மத்தியப் பிரதேச மாநிலம் சிவபுரி மாவட்டத்தின் கோலாரஸ் மற்றும் ஜகத்புரா ஆகிய இடங்களில் இந்திய அஞ்சல் துறையின் புதிய நவீன துணைத் தபால் நிலையங்களை அவர் நேற்று தொடங்கி வைத்து பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் அஞ்சல் நிலையங்கள் உள்ளூர் மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய எளிமையான, நேரத்தோடு கூடிய மற்றும் நம்பகமான அஞ்சல் சேவைகளை வழங்கும் என்று அப்போது அவர் கூறினார்.

இந்தத் தபால் நிலையங்கள் மூலம் சேமிப்புத் திட்டங்கள் முதல் டிஜிட்டல் சேவைகள் வரை அனைத்தும் கிராமப்புற மக்களுக்கு எளிதில் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

அஞ்சல்துறையில் அரசின் முன்முயற்சிகள் வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை நோக்கிய பயணத்தில் கிராமப்புற மேம்பாட்டிற்குப் பெரிதும் உதவிடும் என்றும் திரு ஜேதிராதித்ய சிந்தியா மேலும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், பாரீசில் நேற்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானை சந்தித்துப் பேசினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அன்பான வாழ்த்துகளை பிரான்ஸ் அதிபரிடம் தெரிவித்துக் கொண்டதாக கூறியுள்ளார்.

தற்போதைய உலகளாவிய பிரச்சனைகளில் திரு. மேக்ரோனின் பார்வை மற்றும் இந்தியா - பிரான்ஸ் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த பிரான்ஸ் அதிபரின் நேர்மறையான கருத்துகளை பெரிதும் பாராட்டுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக பாரிஸில் நடைபெற்ற தூதர்கள் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், தற்போதைய உலகளாவிய மாற்றங்கள் மற்றும் இந்தியா - பிரான்ஸ் இடையிலான உறவின் முக்கியத்துவம் குறித்து அவர் பேசினார்.

வர்த்தகம், நிதி, தொழில்நுட்பம், எரிசக்தி, வளங்கள் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றால் உலகம் இன்று பெரும் மாற்றங்களைச் சந்தித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மாற்றங்களுக்கு மக்களின் சிந்தனை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே மிக முக்கியக் காரணியாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடுகள் தன்னிச்சையாக முடிவெடுக்கும் உத்திசார் சுயாட்சியைப் பேணுவதில் இந்தியா மற்றும் பிரான்ஸ் இடையிலான செயல்பாடுகள் மிக முக்கியப் பங்கு வகிப்பதாக திரு.ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

ரயில்வேயில் அர்ப்பணிப்பு உணர்வுடன் சிறப்பாக பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் மண்டலங்களை அங்கீகரிக்கும் வகையில், விருதுகள் வழங்கப்பட உள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெற உள்ள விழாவில் இந்த விருதுகளை ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் வழங்க உள்ளார்.

மகா கும்பமேளா போன்ற பிரம்மாண்ட நிகழ்வுகளின் போது, பாதுகாப்பான மற்றும் தடையற்ற இரயில் போக்குவரத்தை உறுதி செய்த பணியாளர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

மேலும், சிறப்பாகச் செயல்பட்ட ரயில்வே மண்டலங்களுக்கு 26 கேடயங்களையும் அமைச்சர் வழங்க உள்ளதாக ரயில்வே அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

மத்திய அரசின் 'டிஜிட்டல் இந்தியா' இயக்கத்தின் ஒரு முக்கிய அங்கமான நேரடிப் பணப்பரிமாற்றம் நடப்பு நிதியாண்டில் மிகப்பெரிய மைல்கல்லை எட்டியுள்ளது.

அரசு நலத்திட்டங்களின் பலன்கள் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக மக்களைச் சென்றடைவதை இத்திட்டம் உறுதி செய்துள்ளதாக மத்தி அரசு கூறியுள்ளது.

கடந்த மாதம் வரை மொத்தம் 966 அரசு நலத்திட்டங்கள் நேரடிப் பணப்பரிமாற்றத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இத்திட்டதின் கீழ் சுமார் 210 கோடி முறை பணப்பரிமாற்றங்கள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ரூ.2.87 லட்சம் கோடி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புணர்வையும் அதிகரிக்கப் பல்வேறு புதிய முன்னெடுப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய நிதி அமைச்சகம் கூறியுள்ளது.

அதிநவீன வாடிக்கையாளர் குறைதீர்க்கும் முறை மூலம் ஆண்டுக்குச் சுமார் 1.5 லட்சம் புகார்கள் வரை கையாளப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது.

<<<<>>>>

வெனிசுலாவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அந்நாட்டு குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினரை அரசு விடுவிக்க உள்ளதாக வெனிசுலா நாடாளுமன்ற சபாநாயகர் திரு.ஜார்ஜ் ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை அரசாங்கத்தின் நல்லெண்ண நடவடிக்கை என்றும், நாட்டில் அமைதியை நிலைநாட்டும் முயற்சி என்றும் அவர் கூறினார்.

எனினும், எத்தனை பேர் விடுவிக்கப்படுவார்கள் அல்லது அவர்கள் யார் யார் என்பது குறித்த விவரங்களை அவர் வெளியிடவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை விடுவிக்க வேண்டும் என்பது வெனிசுலா எதிர்க்கட்சிகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது.

முன்னாள் அதிபர் நிக்கோலஸ் மதுரோ, போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்காக அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டு, நியூயார்க்கிற்கு கொண்டு செல்லப்பட்ட ஒரு வாரத்திற்குள் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கை வெனிசுலாவின் அரசியல் சூழலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. மனோஜ்குமார் குப்தா, உத்தராகண்ட் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்து குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருக்கும் திரு. குகநாதன் நரேந்தர், இன்று ஓய்வு பெறுவதை முன்னிட்டு இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளதாக குடியரசுத்தலைவர் மாளிகை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

திரு. மனோஜ்குமார் குப்தா பொறுப்பேற்கும் தேதியில் இருந்து அவரது நியமனம் அமலுக்கு வரும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை அமெரிக்காவின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான **NVIDIA** குழுவினர் நேற்று புதுதில்லியில் சந்தித்துப் பேசினர்.

நாட்டின் சொந்தத் தேவைகளுக்கான அதிநவீன கிராபிக்ஸ் செயலாக்க பிரிவுகளை உருவாக்குவது குறித்து இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டதாக சமூக வலை தளத்தில் அமைச்சர் பதிவிட்டுள்ளார்.

மிக வேகமான செயல்திறனை வழங்கக்கூடிய **'DGX Spark'** போன்ற சாதனங்களைத் ,இந்தியாவில் தயாரிப்பது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சுயசார்பு மற்றும் சர்வதேச அளவிலான போட்டித்திறன் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் துறைமுகங்கள் செயல்படுவதை மத்திய அரசு உறுதி செய்து வருவதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

சென்னை, எண்ணூர் துறைமுகங்களில் வளர்ச்சித்திட்டங்களை நேற்று அவர் தொடங்கிவைத்துப் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை நோக்கமாகக் கொண்டு அரசு சீர்திருத்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

துறைமுகங்களை நவீனப்படுத்துதல், கடலோரப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், டிஜிட்டல்மயம் போன்ற பல்வேறு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் **Neil Oberleitner** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-7, 6-4, 10-6** என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Peter** - கஜகஸ்தானின் **Grigoriy Lomakin** இணையை வென்றது.

--------------

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arnav Paparkar** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **6-2, 7-5** என்ற செட் கணக்கில் ஆஸ்திரியாவின் **Thilo Behrmann**-ஐ வென்றார்.

-------------

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மானவ் தாக்கர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **11-8, 7-11, 9-11, 11-7, 11-8** என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் **Simon Gauzy**யை வென்றார்.

-------------

கேலோ இந்தியா பீச் விளையாட்டுப் போட்டியின் நான்காம் நாளான நேற்று தமிழகம் **2** தங்கம், **2** வெள்ளி மற்றும் **3** வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

லட்சத்தீவுகளில் நடைபெற்றுவரும் இந்த போட்டியில் மகளிர் வாலிபால் பிரிவில் தமிழக அணி தங்கப் பதக்கம் வென்றது.

ஆடவர் பிரிவில் தமிழகம் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றியது.

**<<<<The End>>>>**